**நாத்தாண்டிய பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாத்தாண்டிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான நாத்தாண்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்பலை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப்

பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாட்டுதல் செய்ய வேண்டிய ரூபா 91,861,941 ஆன முத்திரை வரி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2024 இறுதிக் கணக்குகள் ஊடாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 277,000 பெறுமதியான சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | பெறவெண்டிய மூலதன உதவிகள் ரூபா 6,080,384 ஆக இருந்த பொதிலும் இது ரூபா 11,263,700 ஆக அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | ரூபா 2,297,365 பெறுமதியான நிர்மாண வேலைகள நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | பெறவெண்டிய மூலதன உதவிகள் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டியிருந்த ரூபா 7,956,415 நிலுவையாக இருக்கின்ற ஏனைய வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ரூபா 1,938,430 கூட்டுத் தொகையான 06 கணக்கு விடயங்கள் வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதுள்ளது. | கணக்கு மீதிகள் சரியாக இருப்பின் பட்டியல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பட்டியல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 166,177,531 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 186,267,559 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 24,143 | 23,640 | 13,418 | 21,443 | 24,587 | 28,226 | 21,226 | 24,389 |
| வாடகை | 31,949 | 24,369 | 21,159 | 4,955 | 29,513 | 24,956 | 22,920 | 4,159 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3,973 | 8,340 | 8,339 | 2 | 5,693 | 3,257 | 3,254 | 3,000 |
| ஏனைய வருமானம் | 161,598 | 118,626 | 117,907 | 5,934 | 33,751 | 50,490 | 50,026 | 1,006 |
| மொத்தம் | 221,663 | 174,975 | 160,823 | 32,334 | 93,544 | 106,929 | 97,426 | 32,554 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,647,420 தொகையான நிலுவயாக இருக்கின்ற மதிப்பீட்டு வரி, ரூபா 796,564 தொகையான ஏக்கர் வரிகள் மற்றும் ரூபா 4,955,098 | நிலுவயாக இருக்கின்ற மதிப்பீட்டு வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவயாக இருக்கின்ற வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான வாடகை நிலுவைகள் என்பன அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 71,894,229 தொகையான நிலுவயாக இருக்கின்ற நீதி மன்ற தண்டப்பணங்கள் மற்றும் ரூபா 124,497,649 தொகையான முத்திரை வரி என்பன பிரதம செயலாளர் மற்றும் மாகாண சபை ஏனைய உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவயாக இருக்கின்ற நீதி மன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரை வரிகள் அறவிடுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். | மன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரை வரிகள் அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நான்தாண்டிய பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணியில் உள்ள நாத்தாண்டிய மக்கள் வங்கிக்கு சார்பான பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதிக்கு சொந்தமான காணி சபைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எழுத்து மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. | காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 04 ஆண்டுகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டில் பூர்த்தியாக்க வேண்டிய 109 செயற்திட்டங்களில் எந்தவொரு செயற்திட்டங்களும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. 04 ஆண்டுகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத 24 செயற்திட்டங்களில் 08 செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ள வேண்டியிருந்தது, ஆகவே, 04 ஆண்டுகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல செயற்திட்டங்களும் பூர்த்தியாக்க முடியாதிருந்தது. | அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகள் அவற்றின் பூர்த்தியாக்கலின் முன்னுரிமைக்கமைய செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அதேபோல அத்தியாவசிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ள வேண்டுமென சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2019 இல் நாத்தண்டிய நகரில் உணவு விற்பனை சாலை மற்றும் வாகன தரிப்பிடங்களிற்கான நிர்மாணங்களிற்கு சபையால் ரூபா 7,804,830 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதி பெறப் பட்டிருக்காமையால் | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அவசியமான அனுமதி பெற்று அரசாங்க நிதிகளை கவனமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வெண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணங்களை அகற்றுவது ஆபத்தாக உள்ளது. | | |
| (ஈ) முதுகட்டுவ பகுதியல் சிறுவர்களின் வாசிப்பு ஆற்றல் மற்றும் கல்விக்கு வசதியளிக்கும் நோக்கில் 2021 இல் ரூபா 1,377,215 ஆக கிரயத்தில் முதுகட்டுவ வாசிப்போர் கூடம் நிர்மாணிக்கப்பட்டது. | | |
| (i) சிறுவர்களின் வாசிப்பு ஆற்றல் மற்றும் கல்விக்கு வசதியளிக்கும் நோக்கில் வாசிப்போர் கூடம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் சிறுவர்கள் அதனை பயன்படுத்தியிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிதிகளை பயன்படுத்தும் போது நிதிகளை வினைத்திறனான வழியில் பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) கட்டம் III ஆக மேல் மாடியில் மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்காக ரூபா 934,416 ஆன தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 04 தூண்கள் நிர்மாணிக்கப்பட்டு கூரை கட்டப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி |
| (உ) மட்டகொட்டுவ விளையாட்டு மைதானத்தை சுற்றி வேலி இடுவதற்காக 2018 இல் சபை நிதிகளிலிருந்து ரூபா 375,625 ஆன தொகை செலவழிக்கப் பட்டிருந்ததுடன் வேலிகள் பௌதீக பரிசோதனையில் புதற்களால் மூடப்பட்டிரந்தது. | தற்பொது இந்த விளையாட்டு மைதானம் சுத்தமாக்கப்பட்டிருந்தது. | அரசாங்க நிதிகளில் நிர்மாணிக்கப்பட்ட பௌதீக வளங்களிலிருந்து அதிகூடிய நலனை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) திண்மக் கழிவு முகாமைத்தவ நிலையத்தில் CCTV கமரா முறைமை பொருத்துவதற்காக 2019 சபை நிதிகளில் ரூபா 348,290 ஆன தொகை ஏற்பட்டிருந்ததுடன் கமரா முறைமை செயற்பட தொடங்கிய பின்னர் திருத்தம் செய்யப்பட்டிருந்தென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்புபடுத்திய நிறுவனம் பற்றி சபையில் தகவல் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | கமராவை திருத்தவதற்கும் பொருத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கமராவை திருத்தவதற்கும் பொருத்தவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) 2013 இன் 01 ஆம் இலக்க சமுதாய அடிப்படை அமைப்புகள் (நீர் வழங்கல் மற்றும் சற்றாடல் சுகாதாரம்) தாபிப்பு மற்றும் பிரமாணப்படுத்தல் பாதுகாப்பு விதிகளிற்கு அமைய 06 சமுதாய அடிப்படை அமைப்புகள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் | 2024 வரை நீர் வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதாரங்களில் சகல சமுதாய அடிப்படை செயற்திட்டங்களும் பதிவு செய்வதற்கும் முறையான வழியில் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சமுதாய அடிப்படை அமைப்புகள் வருடாந்த அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்காததுடன் சமுதாய அடிப்படை அமைப்புகளின் பல்வேறு முறையீனங்கள் மற்றும் பிரச்சனைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | 15 கைத்தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கைத்தொழில் அனுமதிப்பத்திரத்தை பெறாமல் 31 வியாபாரங்களிற்காக 2023 யூன் 30 இல் ரூபா 75,625 ஆனு நீலஜவுயுர்கு இருக்கின்ற மீதி இருந்ததுடன் சுற்றாடல் பிரமாணப் பெறுப்பு தவிர்க்கப்பட்டிருந்தது. | அனுமதிப் பத்திரங்களை எழுத்து மூலம் வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | வியாபார தளங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு வேண்டுகை செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 47,626,034 ஆக இருந்ததுடன் ரூபா 18,669,586 தொகை 03 ஆண்டுகளை விஞ்சியிருந்தது. | நிலுவையாக இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவையாக இருக்கின்ற தொகைகளை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய தொகை ரூபா 57,514,467 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் திருத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோரை தீர்ப்பனவு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டு வரி 05 ஆண்டுகளிற்கு ஒருதடவை மீளாய்வு செய்யப்பட வேண்டிய பொதிலும் 2010 இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு வரி வீதங்களின் அடிப்படையில் 2023 இல் மதிப்பீட்டு வரி சாட்டுதல் செய்யபட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டு வரி அறிக்கை பெறப்பட்டிருப்பின் அத்தகைய அறிக்கை பிரகாரம் மதிப்பீட்டு வரி சாட்டுதல் செய்யப்படும். | மதிப்பீட்டு வரி அடிப்படையில் சாட்டுதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளுராட்சி ஆணையாளரின் 2019 சனவரி 10 ஆந் திகதிய 2019/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவக்கு முரணாக வலகப்பிட்டடிய பறு கால்வாய்க்கு அருகிலுள்ள கடைகள் குத்தகையாளரின் வேண்டுகை பிரகாரம் 03 ஆண்டுகளிற்காக குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | குத்தகை இரத்து செய்யப் பட்டிருப்பின் கேள்விகள் கோராமல் 2023 ஆம் ஆண்டிற்காக 10 சதவீத வாடகையின் அதிகரிப்பின் பின்னர் குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | கொள்வனவு நடை முறையை பின்பற்றி சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நாத்தானிடிய சுப்ப மாக்கட்டின் மேல் மாடியிலுள்ள மண்டபம் கேள்வி கோராமல் 2023 இல் நிதி மற்றும் கொள்கை குழு தீர்மானம் மற்றும் வருடாந்த பொது பரிந்துரைகளில் 2022 இல் ரூபா 88,000 ஆக தொகைக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. | அடுத்தவரும் ஆண்டுகளில் கேள்வி கோரப்பட்டிருந்தவை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வனவு நடை முறையை பின்பற்றி சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலீச குடியரசின் 2021 யூலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தலின் பிரகாரம் தேசிய பேரவையின் 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பகுதி ஐஐ இன் 24 ஆம் பிரிவின் ஐஐ ஆம் பந்திக்கமைய துண்டாக்கப்பட்ட காணியின் 10 சதவீத சந்தைப் பெறுமதி தகுதபெற்ற மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்டது என குறிப்பிடப்பட்ட போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டில் 05 காணிகளிற்காக வருமான பரிசோதகரின் மதிப்பீட்டில் ரூபா 3,693,660 ஆன தொகை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | தற்பொது காணித் துண்டுகளின் 10 சதவீதம் தொடர்பில் உரிய பணத்தை சாட்டுதல் செய்வதற்காக மதிப்பீடுகளை பெறுவதற்கு மதிப்பீட்டாளரை கண்டுபிடிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வர்த்தமாணி அறிவித்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 127 ஆம் பிரிவிற்கு அமைய இடுகாடு மற்றும் சுடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் சயின் அதிகார எல்லைக்குள் சபைக்கு சொந்தமான 15 இடுகாடுகள் மைதானங்கள் கையேற்கப்பட்டிருக்கவில்லை. 43 சுவீகரிக்கப்படாத காணிகள் இருந்ததுடன் அவற்றினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஆதனங்களின் சட்ட உரிமையை மாற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேமிப்பு கணக்கின் மீதி சபையால் ரூபா 2,157,322 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அத்துமீறிய கட்டமைப்புகளில் விதிக்கப்பட்ட தண்டப்பண சேகரிப்புகளிற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை வினைத்திறனான அபிவிருத்தி நடவடிக்கைக்காக இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த கணக்கிலுள்ள பணத்தை பயன்படுத்தவதற்காக காலத்திற்கு காலம் அதிகாரசபையால் அனுமதி பெறுவதற்கு எழுத்து மூல வேண்டுகை செய்யக்கட்டிரந்த போதிலும் இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பதில் பெறப்பட்டிருக்கவில்லை. | வினைத்திறனான நடவடிக்கைக்கு நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | காணி துண்டாக்கலில் கையேற்கப்பட்ட 21 காணிகள் வினைத்திறான பயிர்ச் செய்கை நோக்கத்திற்காக குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. க் | ஏதாவது குத்தகை ஆவணம் சமர்ப்பிக்காமையால் குத்தகைக்கு விட முடியாதிருந்தததுடன் சபை பயர்ச்செய்கைக்கு விட நடவடிக்கை எடுக்கும். | சொத்துக்களில் இருந்து அதிகூடிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் முன்றாம் நிலை மட்டத்தில் 02 வெற்றிடங்கள், இரண்டம் நிலை மட்டத்தில் 15 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலை மட்டத்தில் 43 வெற்றிடங்களும் நிலவியது. | அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு ஆட்சேர்பதற்கு வேண்டப்பட்ட போதிலும் எவ்வித பதில்களும் பெறப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு தேவையான ஆளணியை சரியாக இனங்கண்டு அனுமதிக்கப்பட வேண்டும். |
| (ஆ) பதவிவறிதாக்கப்பட்ட, இடை நிறுத்தப்பட்ட மற்றும் இடமாற்றம் செய்யப்பட்ட 26 ஊழியர்களிடமிருந்து ரூபா 96,058 ஆன மீதி பெறவெண்டியிருந்தது. | அறவிட இயலாதிருந்தது. | செலுத்த வேண்டிய ஊழியர் கடன் மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| PF- 7478 ஆம் இலக்க கப் வாகனம் 2022 பெப்ரவரி 08 இல் விபத்துக்கு உட்பட்டிருந்தது. நி.பி 104(3) இன் கீழ் நட்டங்கள் மீதான ஆரம்ப அறிக்கை 2022 பெ்ரவரி 09 .ல் வழங்கப்பட்டிருந்த போதிலும் நி.பி 104(4) இன் பிரகாரம் முழு அறிக்கையும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிக்கை பெறப்பட்டிருப்பினும் முழு அறிக்கையும் நி.பி 104(4) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் முன்னேற்ற செயலாற்றலை தரமுயர்த்துவதற்கான ஆதரவு செயற்பாக உள்ள போதிலும் சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு வருமான சேகரிப்பு, வருகை பதிவேட்டின் பரிசோதனை, படிக் கொடுப்பனவின் பரிசோதனை மற்றும் களஞ்சிய பரிசோதனை என்பவற்றில் மாத்திரமே கவனம் செலுத்தியிருந்தது. | 2022 இல் உள்ளக கணக்காய்வில் இருந்த நலிவுகளை தவிர்ப்பதால் உள்ளக கணக்காய்வை வலுப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் மேவுவதற்கு போதிய உளளக கணக்காய்வை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டு மதிப்பீடுக் மூலம் 94 செலவின விடயங்கள் தொடர்பில் செய்யப்பட்ட ரூபா 33,266,340 தொகையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட | சமர்ப்பிக்கப்பட்ட தருத்துக்களுடன் உடன்படுகின்றோம் | பாதீட்டு இலக்குகளை அடைவதற்காக செயற்பாட்டு |

| | | |
|---|---|---|
| போதிலும் முழு ஒதுக்கீடும் மீளாய்வாண்டிற்குள் உரிய நோக்கதை அடைவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கைகளிற்காக திட்டமிடப்பட வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது 2023 ஆம் ஆண்டின் பொது 08 இலக்குகளை இனங்காணப்பட்ட 68 நிகழ்ச்சித் திட்டங்களை இலக்குகளை அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் அந்த இலக்குகளை அடைவதற்கு 53 நிகழ்ச்சித் திட்டங்களை் முன்னேற்றத்தை அடைய தவறியிருந்ததுடன் இது 50 சதவீதத்திற்குத் குறைவாக இருந்தது. | வருடாந்த செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அபிவிருத்தி செயற்தட்டங்களை நிறுத்தவதற்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் நிலைபெறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக இனங்காணப்பட்ட அபிவிருத்தி பரிந்துரைகளை அமுலாக்குவதற்கு முடியாதிருந்தது. | உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |